செ.வெ.எண்: 723 நாள்: 07.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் 195 ஊராட்சிகளில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் 140 கோடியே 97 லட்சம் மதிப்பீட்டில் தனிநபர் இல்லம் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ஜல் ஜீவன் மிஷன் திட்டப்பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (07.11.2020) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது**

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2020-2021 ஆண்டிற்கு ஊரக பகுதிகளில் உள்ள 195 ஊராட்சிகளில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் 95 கோடியே 97 இலட்சத்திலும், 15வது நிதிக்குழு மானிய நிதி மற்றும் பிற நிதியிலிருந்து ஒருங்கிணைத்து சுமார் 45 கோடியும் என ஆக மொத்தம் 140 கோடியே 97 இலட்ச மதிப்பீட்டில் ஊரக பகுதியில் உள்ள தனிநபர் இல்லங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல்,உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் அரசுப் பள்ளிகள்,சத்துணவு மையங்கள்,அங்கன்வாடி மையங்கள் ஆகியவற்றுக்கு குடி குடிநீர் இணைப்பு வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் அனைத்தும் துரிதப்படுத்தி குறித்த காலத்தில் ஒப்பந்தக்காரர்கள்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,ஒன்றிய பொறியாளர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து ஜனவரி 2021க்குள் முடித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்,தஞ்சாவூர் மாவட்டத்திற்குட்பட்ட 195 கிராம ஊராட்சிகளில் உள்ள தனிநபர் இல்லங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் விரைந்து முடித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருஅ.பழனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.இராமசாமி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)திரு.முருகேசன் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.